# டிசம்பர் – 05 – செவ்வாய்

**புனித சாபாஸ்**

**கடவுளே, அரசருக்கு உமது நீதித்தீர்ப்பை வழங்கும் ஆற்றலை அளியும்: திபா. 72:1**

## முதல் வாசகம் : ஏசாயா 11 : 1 - 10

ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும் அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனிதரும். ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும் ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத்திறன், ஆற்றல், நுண்மதி, ஆண்டவரைப்பற்றிய அச்ச உணர்வு- இவற்றை அந்த ஆவி அவருக்கு அருளும். அவரும் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பதில் மகிழ்ந்திருப்பார். கண் கண்டதைக் கொண்டு மட்டும் அவர் நீதி வழங்கார் காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் அவர் தீர்ப்புச் செய்யார். நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்குவார் நடுநிலையோடு நாட்டின் எளியோரது வழக்கை விசாரிப்பார் வார்த்தை எனும் கோலினால் கொடியவரை அடிப்பார் உதட்டில் எழும் மூச்சினால் தீயோரை அழிப்பார். நேர்மை அவருக்கு அரைக்கச்சை உண்மை அவருக்கு இடைக்கச்சை. அந்நாளில், ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும் அக்குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துக்கொள்ளும். கன்றும், சிங்கக்குட்டியும், கொழுத்த காளையும் கூடி வாழும் பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச் செல்லும். பசுவும் கரடியும் ஒன்றாய் மேயும் அவற்றின் குட்டிகள் சேர்ந்து படுத்துக்கிடக்கும் சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும் பால்குடி மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையினுள் தன் கையை விடும். என் திருமுலை முழுவதிலும் தீமை செய்வார் எவருமில்லை கேடு விளைப்பார் யாருமில்லை ஏனெனில், கடல் தண்ணீரால் நிறைந்திருக்கிறது போல, மண்ணுலகம் ஆண்டவராம் என்னைப் பற்றிய அறிவால் நிறைந்திருக்கும். அந்நாளில், மக்களினங்களுக்குச் சின்னமாய் விளங்கும் ஈசாயின் வேரைப் பிறஇனத்தார் தேடி வருவார்கள் அவர் இளைப்பாறும் இடம் மாட்சி நிறைந்தகாக இருக்கும்.

**பதில்பாடல் :** ஆண்டவருடைய காலத்தில் நீதியும் சமாதானமும் தழைத்தோங்கும்

## நற்செய்தி : லூக்கா 10 : 21 - 24

அக்காலத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, ”தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்” என்றார். ”என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். தந்தை யாரென்று மகனுக்குத் தெரியும் மகன் யாருக்கு வெளிப்படுத்த விரும்புகிறாரோ அவருக்கும் தெரியும். வேறு எவரும் தந்தையை அறியார்” என்று கூறினார். பின்பு அவர் தம் சீடர் பக்கம் திரும்பி அவர்களிடம் தனியாக, ”நீங்கள் காண்பவற்றைக் காணும் வாய்ப்புப் பெற்றோர் பேறுபெற்றோர். ஏனெனில் பல இறைவாக்கினர்களும் அரசர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண விரும்பினார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்” என்று கூறினார்.

**தியானம்:** கண்களும் காதுகளும் இருக்கின்ற எல்லோரும் சரியாக காண்பதும் இல்லை, கேட்பதும் இல்லை. பார்வை ஒன்றே ஒளியும் ஒன்றே ஆனால் பல்லுணர்வு வேறு. அது ஞானத்தால் பிறக்கிறது. அது சாதாரண இறை இயேசுவின் சீடர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டது. சாதாரண மனிதர்களைத்தான் தன் பணிக்காக ஆண்டவர் தேர்ந்தெடுத்தார். இந்த சாதாரண மனிதர்கள் தான் அசாதாரண பணிகளை செய்தார்கள். இது இறைவனின் பெருந்தன்மை மற்றும் ஆண்டவரின் நன்மைத்தனம். இயேசுவுக்கு மகிழ்ச்சியை தந்தது அந்த சீடர்களின் உண்மையான நற்செய்திப்பணியே. இந்த உலகமும் பேதுருவையும், யோவானையும் கல்வியறிவு அற்றவர்கள் எனக்கண்டது. எல்லாம் அறிந்த பவுலடியார் கூட ஒன்றும் தெரியாத குழந்தையைப்போல தான் ஆண்டவரிடம் சரண்டைந்தார். இந்த குழந்தை அணுகு முறை தான் இவர்களை அகிலமே அதிசகிக்கின்ற அளவுக்கு ஆச்சரியப்படுத்தியது. நாமும் ஆண்டவரிடம் “குழந்தை அணுகுமுறை “ யைக் கொண்டு தான் செல்ல வேண்டும் செபிக்க வேண்டும். நம்மையும் அப்போது தான் அதிசயம் புரிய வைப்பார்.